# முன்னெச்சரிக்கை குழு (Early Warning Committee)

**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள்**
**முன்னிலை: திரு.சி.கதிரவன், இ.ஆ.ப.,**

ந.க.20985/2017/பே.மே. நாள்:30.08.2017

பொருள்: பேரிடர் மேலாண்மை - வடகிழக்கு பருவ மழை 2017 - கிருஷ்ணகிரி மாவட்டம் - மாவட்டத்தில் பருவ மழையின் பொருட்டு ஆரம்ப எச்சரிக்கை குழு நியமனம் செய்தல் - ஆணைகள் பிறப்பித்தல்.

பார்வை: முதன்மை செயலர் / வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரைகள் நாள்: 23.08.2017.

- - - - - - - - -

**ஆணை:**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் எதிர்வரும் வடகிழக்கு பருவ மழை காலத்தில் மழை / பெருவெள்ளம் ஏற்படும் பொழுது பெரும் சேதத்தை தவிர்க்க பொது மக்களுக்கு எச்சரிக்கை அளிக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை குழு நியமித்து ஆணையிடப்படுகிறது.

1. கோட்ட பேரிடர் மேலாண்மை அலுவலர், (சார் ஆட்சியர்/வருவாய் கோட்ட அலுவலர்)
2. காவல் துணை கண்காணிப்பாளர்,
3. வருவாய் வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர்
4. வருவாய் ஆய்வாளர்,
5. கிராம நிர்வாக அலுவலர் மற்றும் ஊராட்சி செயலர்.
6. செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.

1. மேற்கண்ட குழு உறுப்பினர்கள் பேரிடர் காலங்களில் தங்களின் அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகள் / கிராமங்களில் நிகழும் இயல்புக்கு மாறான நிகழ்வுகள் குறித்து பொதுமக்களுக்கு எளிதாக சென்று சேரும் வகையில் முழுமையான / உண்மையான தகவல்களை தெரிவித்து முன்னெச்சரிக்கை செய்து அறிக்கை அனுப்ப வேண்டும்.

2. தேவையில்லாத வதந்திகள் மூலம் பொதுமக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தாமலும், வதந்திகள் ஏற்படுவதை தடுத்தும் முன்னெச்சரிக்கை செய்தல் வேண்டும்.

3. முடிவுகளை மேற்கொள்ளுவதிலும், தகவல்களைப் பரிமாறிக் கொள்வதிலும் ஒளிவு மறைவற்றத் தன்மையைக் கடைபிடித்தல் வேண்டும்.

4. நிகழ்வுகள் குறித்து உண்மையான, தெளிவான அறிக்கையை உடனுக்குடன் பொறுப்பு அலுவலர்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

. . . 2 . . .

5. முக்கியமான நிகழ்வுகள், அசாதாரண சூழ்நிலைகள் எவையேனும் இருப்பின் உடன் வட்ட பொறுப்பு அலுவலர் மூலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கவனத்திற்க்கு கொண்டு செல்ல வேண்டும்.

(ஒம்/-) சி.கதிரவன்,
மாவட்ட ஆட்சியர்,
கிருஷ்ணகிரி.

/ உண்மை நகல் /

மாவட்ட ஆட்சியருக்காக.

பெறுதல்

சம்மந்தப்பட்ட அலுவலர்கள். (மின்னஞ்சல் வாயிலாக)
(அலுவலகத் தலைவர்கள் தங்களின் சார்நிலை அலுவலர்கள் / பணியாளர்களுக்கு சார்வு செய்யவேண்டியது)

நகல் : முதன்மை செயலர்/வருவாய் நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5 - தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: காவல் கண்காணிப்பாளர், கிருஷ்ணகிரி,

நகல்:திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கிருஷ்ணகிரி - உரிய நடவடிக்கைக்காக

நகல் : சார்ஆட்சியர், ஓசூர்,

நகல் : வருவாய் கோட்ட அலுவலர், கிருஷ்ணகிரி,

நகல் : மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது), கிருஷ்ணகிரி,

நகல் : மாவட்ட ஆட்சியரின் நேர்முக எழுத்தர் மேஜைக்கு,

நகல் : மாவட்ட வருவாய் அலுவலரின் நேர்முக எழுத்தர் மேஜைக்கு.